Registrar of News Paper for India Regn. No. 15261/2005 (R.Dis no.1834/04) Date of Publication : 1st Week of Every Month 4 Pages


CVPA NEWS

A Monthly Newspaper (Tamil & English) for Video & Photographic Professionals

AN OFFICIAL NEWS MAGAZINE FROM CHENNAI VIDEO & PHOTOGRAPHER'S ASSOCIATION

Film - 18 MARCH 2023 Click - 12 Re. 1

நமது சங்கத்தின் மார்ச் மாத ரினிவல் தொடங்குகிறது. சங்க உறுப்பினர்கள் தங்களுடைய அடையாள அட்டையை தவறாமல் ரினிவல் செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

- CVPA

# மார்ச் மாத ரினிவலை தவறவிடாதீர்கள்
# விரைவில் CVPA கிரிக்கெட் போட்டி

அன்பார்ந்த நமது சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் வணக்கம்!

இந்த மார்ச் மாதத்தில் நிறைய உறுப்பினர்கள் தங்களுடைய அடையாள அட்டையை புதுப்பிக்க வேண்டி இருக்கிறது . இதை சரியாக நினைவில் வைத்துக் கொண்டு உங்களுடைய அடையாள அட்டையை புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.2016 ஆம் ஆண்டோடு நின்று போன கிரிக்கெட் போட்டியை நடத்த நமது செயற்குழுவில் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான பணியில் சங்க நிர்வாகிகளும் செயற்குழு உறுப்பினர்களும் ஈடுபட்டு வருகிறார்கள். 2016 ஆம் ஆண்டை போலவே 15க்கும் மேற்பட்ட குழுக்களை எதிர்பார்க்கிறோம். கிரிக்கெட் போட்டி நடைபெறும் தேதி விரைவில் அறிவிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன் .

நமது சங்கத்தில் 1996 முதல் 2023 ஆண்டு மார்ச் நிலவரப்படி 437 உறுப்பினர்கள், ஆயுட்கால உறுப்பினர்களாக உள்ளனர். ஆரம்ப காலகட்டத்தில் ஆயுட்கால உறுப்பினர்களிடமிருந்து 2000 ரூபாய் பெறப்பட்டது. தற்போது புதிதாக இணையும் ஆயுட்கால உறுப்பினர்களுக்கு 6 ஆயிரம் ரூபாய் பெறப்படுகிறது. 2005 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுக்குழுவிலேயே ஒரு முக்கிய தீர்மானம் கொண்டு வரப்பட்டது. அது பத்து வருடம் நிறைவடைந்த ஆயுட்கால உறுப்பினர்களின் விபத்து காப்பீடு தொடர்வது குறித்து அப்போது பேசப்பட்டது. அதன்படி , விபத்து காப்பீடு இன்சூரன்ஸ் செய்ய கால அளவு 10 ஆண்டுகள் மட்டுமே என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. எனவே 10 ஆண்டுகள் நிறைவு செய்த ஆயுட்கால உறுப்பினர்கள் இன்சூரன்சுக்கான பணத்தை செலுத்த வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. அப்படி பணம் செலுத்தாத ஆயுட்கால உறுப்பினர்களை இன்சூரன்ஸ் இல்லாத ஒரு சாதாரண உறுப்பினராகவே சங்கத்தில் தொடரலாம் என்று 2005 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுக்குழுவிலேயே தீர்மானிக்கப்பட்டது. அதேசமயம் அந்த ஆண்டு புதியதாக சங்கத்தில் இணைந்த ஆயுட்கால உறுப்பினர்களுக்கு, 2000 ரூபாய் என்பதை 3000 ரூபாய் என மாற்றப்பட்டது. சங்கம் தொடங்கியது முதல் 2007 ஆம் ஆண்டு வரை 10 ஆண்டுகள் நிறைவடைந்த ஆயுட்கால உறுப்பினர்களுக்கு இந்த தீர்மானம் குறித்து அன்றைய நிர்வாகம் தரப்பில் நினைவூட்டப்பட்டது. ஆனாலும் இன்சூரன்ஸ்ஸுக்கு தேவையான பணத்தை ஒரு சிலரைத் தவிர, பெரும்பாலான ஆயுட்கால உறுப்பினர்கள் பணம் செலுத்தாமல் காலம் கடத்தி வந்தார்கள். ஆனாலும், சங்க உறுப்பினர்களின் குடும்ப நலன் கருதி ஆயுட்கால உறுப்பினர்கள் அனைவருக்குமே விபத்து காப்பீடு இன்சூரன்ஸ் அடுத்தடுத்து வந்த நிர்வாகம் சார்பாக செய்யப்பட்டது. 2013ஆம் ஆண்டில் ஆயுட்கால உறுப்பினர்களின் கட்டணமும் 3000 ரூபாய் என்பதை 6000 ரூபாயாக மாற்றி அமைக்கப்பட்டது.

ஒன்றுக்கு இரண்டு பொதுக்குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானம் காலம் கடந்து வருவதால் ,10 ஆண்டுகள் நிறைவடைந்த ஆயுட்கால உறுப்பினர்கள், இன்சூரன்ஸ் தொகையை, செலுத்தாமலேயே, அவர்களுக்கு தேவையான தொகையை சங்கம் செலவிட்டு வருகிறது .இந்த கட்டாய சூழ்நிலையை தவிர்க்கவும், இதனால் பின்னர் ஏற்பட போகும் பொருளாதார பிரச்சனை தொடராமல் இருக்கவும் , இனி அடுத்தடுத்து வரும் நிர்வாகங்கள் பதில் சொல்லக்கூடிய ஒரு கட்டாய சூழ்நிலை ஏற்படும்.இதை கருத்தில் கொண்டுதான், செயற்குழுவைக் கூட்டி இதுகுறித்து விவாதித்து, 10 ஆண்டுகள் நிறைவு செய்த ஆயுட்கால உறுப்பினர்களுக்கு மீண்டும் நினைவூட்டல் கடிதத்தை பதிவுத் தபால் மூலமாக அனுப்ப வேண்டும் என்று செயற்குழுவில் தீர்மானிக்கப்பட்டது . மேலும், ஒவ்வொரு வருடமும் ஆயுட்கால உறுப்பினர்களுக்கு மார்ச் மாதம் தான் விபத்து காப்பீடு செய்யப்படுகிறது. அதனால் தான் மார்ச் மாதத்திற்குள் இன்சூரன்ஸ் தொகையை செலுத்துமாறு சங்கம் சார்பாக கேட்டுக் கொள்ளப்படுகிறது. கடிதம் கிடைக்கப் பெற்றவர்கள் என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு தங்களுடைய சந்தேகங்களை தீர்த்துக் கொள்கிறார்கள். 60-65 வயதில் உள்ள முதியவர்கள் என கருதப்படும் சீனியர் சிட்டிசன்கள் இன்ஷூரன்ஸ்க்கு விலகல் கடிதம் கொடுத்து வருகின்றனர். காரணம் .இவர்களுக்கான இன்சூரன்ஸ் வயது 70 என உள்ளதால், இவர்கள் பணம் செலுத்தினாலும் இது அவர்களுக்கு நஷ்டம் தான் . எனவே இந்த முடிவை அவர்கள் எடுக்கிறார்கள் .இந்த விஷயத்தில் அனைவரும் முழு ஒத்துழைப்பு அளிப்பார்கள் என்று நம்புகின்றேன்.

கடந்த மாதம் முன்னாள் பகுதி செயலாளர் சத்திய குமார் அவர்கள் சாலை விபத்தில் சிக்கி காலில் எலும்பு முறிவு ஏற்பட்டு மருத்துவ சிகிச்சைக்குப் பின்னர் வீட்டில் ஓய்வெடுத்து வருகிறார். அவரை நேரில் சந்தித்து நலம் விசாரித்து நமது சங்கம் சார்பாக வழங்கப்படும் நலத்திட்ட உதவித்தொகை 5000 ரூபாயை நமது சங்கத் தலைவர் செல் செல்வம் அவர்கள் வழங்கினார். இவருடன் பிஆர்ஓ ரவிக்குமார் அவர்களும், இணைச்செயலாளர் செந்தில்குமார் அவர்களும், தி .நகர் பகுதி செயலாளர் பழனி அவர்களும் உடன் சென்று இருந்தார்கள்.

சென்னை திருவொற்றியூர் பகுதி உறுப்பினர் திரு அவர்கள் உடல் நலம் குன்றி இருப்பதாக சங்கத்திற்கு தகவல் கிடைத்ததும் சங்கச் செயலாளர் ஆகிய என்னுடன் துணைத் தலைவர் கவுஸ்பாஷா அவர்களும், இணைச்செயலாளர் பிரபா அவர்களும், பகுதி செயலாளர் மேகநாதன் அவர்களும், நேரில் சென்று நலம் விசாரித்து அவரிடம் சங்கம் சார்பாக வழங்கப்படும் நலத்திட்ட உதவிக்கான தொகை 5 ஆயிரம் ரூபாய் வழங்கினோம்.

உலகப் புகழ்பெற்ற ரோலண்ட் நிறுவனம் தனது புதிய வீடியோ மிக்ஸர் மற்றும் ஸ்ட்ரீம்மிங் சொல்யூஷன் தொடர்புடைய சாதனங்களை கடந்த மாதம் சென்னை வடபழனி கிரீன் பார்க் ஹோட்டலில் காட்சிப்படுத்தி, அறிமுகம் செய்தது.ரோலண்ட் நிறுவனத்தின் அழைப்பின் பேரில் இந்த நிகழ்ச்சியில் நமது சங்க நிர்வாகிகளும் கலந்து கொண்டார்கள்.

நமது சங்கத்தின் நுங்கம்பாக்கம் பகுதி முன்னாள் செயலாளர் ரஜினி பத்மநாபன் அவர்களின் மகள் தலைமையிலான மகளிர் ஹாக்கி அணி வெகு சிறப்பாக விளையாடி நான்காவது முறையாக முதலமைச்சர் கோப்பையை வென்று சாதனை படைத்துள்ளார்கள். அவருக்கு நமது சங்கம் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்படிக்கு
DM. **பிரேம்குமார்**
CVPA செயலாளர்

# CVPA செயற்குழு கூட்ட தீர்மானங்கள்

நமது சங்கத்தின் செயற்குழு கூட்டம் கடந்த மாதம் (21.02.2023 ) சென்னை அண்ணா சாலை எஸ்விஎஸ் கிளப்பில் நடைபெற்றது. நமது சங்கத் தலைவர் செல். செல்வம் அவர்கள் இந்த செயற்குழு கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். நமது சங்க செயலாளர் DM. பிரேம்குமார் அவர்கள் முன்னிலை வகித்தார். இச்செயற் குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:

### தீர்மானம்: 01

2022 ல் புதிய நிர்வாகம் பொறுப்பேற்றவுடன் தற்போது இங்கஅ அலுவலகம் செயல்படும் இடத்தின் உரிமையாளர் இன்றைய நிர்வாகிகளை அணுகி தற்போது குத்தகையில் இருக்கும் முறையை மாற்றி மாத வாடகையாக தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். நமது நிர்வாகத்தின் சார்பில் மூன்று மாத காலம் அவகாசம் கேட்கப்பட்டது. இந்த அவகாசம் முடிந்துவிட்ட நிலையில் 2023 ஜனவரி மாதம் முதல் மாத வாடகை ரூபாய் 8000 எனவும் அட்வான்ஸ் ரூபாய் 80,000 ஆயிரம் எனவும் அலுவலக இடத்தின் உரிமையாளர் நிர்ணயம் செய்துள்ளதை செயற்குழு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

### தீர்மானம்: 02

நமது சங்க அலுவலக ஊழியர் பவித்ரா அவர்கள் ஊதியம் உயர்த்தி தரவேண்டும் என்று புதிய நிர்வாகத்திடம் கோரிக்கை வைத்தார். இது செயற்குழுவில் தெரிவிக்கப்பட்டு அவருடைய கோரிக்கையின் அடிப்படையில் இதுவரை மாதம் 12 ஆயிரம் ரூபாய் என இருந்ததை மாற்றி இனி மாதம் 15 ஆயிரம் ரூபாய் என உயர்த்தி தர செயற்குழு முடிவு செய்தது. இதனை ஏப்ரல் முதல் தேதியில் இருந்து அமல் படுத்த செயற்குழு ஒப்புதல் அளித்தது.

### தீர்மானம்: 03

2013 ஆம் ஆண்டு நடைபெற்ற 18 வது பொதுக்குழுவின் தீர்மானபடி CVPA ஆயுட்கால உறுப்பினர்களில், பத்து வருடம் நிறைவடைந்த ஆயுட்கால உறுப்பினர்களிடமிருந்து அடுத்த 10 ஆண்டுகளுக்கு தேவையான விபத்து காப்பீடு செய்ய வேண்டிய தொகையை பெறுவதற்கான கடிதம் அனுப்புதல் குறித்து முதலில் நமது செயற்குழு உறுப்பினர்களுக்காக மட்டும் செயல்படும் whatsapp குரூப்பில் இந்த தகவல் முன் வைக்கப்பட்டது. வாட்ஸ் அப் குரூப்பில் முதன்மை நிர்வாகிகள் ஆலோசித்து, 10 வருடம் நிறைவடைந்த ஆயுட்கால உறுப்பினர்களுக்கு மட்டும் விபத்து காப்பீடு செய்ய வேண்டிய தொகையை மார்ச் மாதமே செலுத்துவது குறித்து அவர்களுக்கு நினைவூட்டும் விதமாக ஒரு கடிதம் தயார் செய்யப்பட்டு, அது 15.02.2023 அன்று மதியம் 2 மணி அளவில் செயற்குழு உறுப்பினர்களுக்கு மட்டும் செயல்படும் whatsapp குரூப்பில் நமது சங்க பிஆர்ஓ மூலமாக அந்த கடிதம் PDF செய்து அனுப்பப்பட்டது. அதன் பிறகு 21.02.2023அன்று மாலை சென்னை அண்ணா சாலை எஸ்விஎஸ் கிளப்பில் நடைபெற்ற கூட்டத்தில் அந்த கடிதம் காட்சிப்படுத்தப்பட்டது. செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் அந்த கடிதத்தின் சாராம்சத்தை ஏற்றுக் கொண்டு கடிதத்தை பதிவு தபாலில் ஆயுட்கால உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்க அனுமதி அளித்தனர். 10 வருடம் நிறைவு செய்த ஆயுட்கால உறுப்பினர்கள் விபத்து காப்பீடு செய்ய வேண்டிய தொகையை, கடந்த நிர்வாகிகள் வாங்கிய 4000 ரூபாயை அப்படியே தொடர்ந்து வாங்க செயற்குழு ஒப்புதல் அளித்தது. இந்த செயற்குழுவில் 18 ஆவது பொதுக் குழுவின் தீர்மானத்தை முழுமையாக செயல்படுத்த வேண்டும் என்று ஒரு மனதாக குரல் எழுப்பினார்கள். இம்முறை இன்சூரன்ஸ் பணம் செலுத்தாத 10 வருடம் நிறைவடைந்த ஆயுட்கால உறுப்பினர்களின் இன்சூரன்ஸ் பெயர் பட்டியலில் இருந்து பதினெட்டாவது பொதுக்குழு தீர்மானத்தின்படி நீக்கப்படுவார்கள் என அறிவுறுத்தப்பட்டது. காப்பீடு தொகைகட்ட தவறும் ஆயுட்கால உறுப்பினர்களுக்கு சங்கத்திலிருந்து கிடைக்கப்பெறும் அனைத்து சலுகைகளும் உரிமைகளும் கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. விபத்து காப்பீடு தேவையில்லை என்று நினைப்பவர்கள் அதனை கடிதம் மூலம் தெரியப்படுத்தலாம் என்று அந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது.

### தீர்மானம்: 04

TVPA நடத்திய டிஜி மீடியாவிற்கு நமது CVPA சங்கம் முழுமையாக செயல்பட்டது.TVPA சார்பாக வரவேண்டிய தொகையை மார்ச் மாதம் நடைபெற உள்ள செயற்குழுவில் கூடி நல்ல முடிவு எடுக்கப்படும் என்று மாநில தலைவர் சிவகுமார் அவர்கள் உறுதியளித்துளார்.

### தீர்மானம்:05

CVPA விற்கு கடந்த காலங்களில் கடன் வைத்துள்ள விளம்பரதாரர்கள் மற்றும் இதர வகையில் பணம் தறாதவர்களுக்கு ம் கடிதம் அனுப்பலாம் என முடிவு செய்யப்பட்டது.

### தீர்மானம் : 06

சில ஆண்டுகளாக நடத்தப்படாமல் உள்ள விளையாட்டு போட்டியை ஏப்ரல் மாதம் நடத்தலாம் என முடிவு செய்யப்பட்டது.

### தீர்மானம்: 07

சங்கத்தின் கணக்கு வழக்குகளை வருங்காலங்களில் அரசாங்கத்தின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு ஆடிட்டரின் ஆலோசனைப்படி செய்ய முடிவெடுக்கப்பட்டது.

### தீர்மானம்: 08

2023 ஆம் ஆண்டிற்கான டைரி,காலண்டர், பாக்கெட் டைரியின் வரவு செலவு கணக்குகள் அறிவிக்கப்பட்டது. சிறப்பாக பணியாற்றிய செயற்குழு உறுப்பினர்களுக்கு நிர்வாகத்தின் சார்பாக நன்றியும் பாராட்டும் தெரிவிக்கப்பட்டது.

### தீர்மானம்: 09

நமது செயற்குழுவில் செயற்குழு உறுப்பினர்கள் மட்டுமே பேசுவதற்கு உரிமை உண்டு என்ற அடிப்படையில் உறுப்பினர்கள் யாரும் பார்வையாளராகவோ அல்லது பேசுவதற்கோ அனுமதி இல்லை என்று முடிவு செய்யப்பட்டது.








திரு. பழனி ஆகியோர் இணைந்து S5 என்கின்ற புதிய பேபி சூட் மற்றும் மாடலிங் ஸ்டுடியோ சென்னை தண்டையார்பேட்டையில் தொடங்கியுள்ளனர். முன்னாள் CVPA செயலாளர் திரு. துரை பாபு மற்றும் CVPA பொருளாளர் திரு. பாலு துணைத் தலைவர் திரு. கவுஸ் பாஷா இணைச் செயலாளர் பகுதி திரு. பிரபா மற்றும் ஆகியோர் திறந்து வைத்து கலந்து கொண்டு சிறப்பித்த தருணம்.



வேளச்சேரி பகுதியை சேர்ந்த CVPA உறுப்பினர் திரு சாம் சுந்தர் அவர்கள் இல்லத் திருமணத்தில் நமது சங்க துணைத் தலைவர் ஜெயக்குமார், இணைச்செயலாளர் சக்தி, பகுதி செயலாளர் இராதாகிருஷ்ணன், சோழிங்கநல்லூர் பகுதி செயலாளர் பழனி ஆகியோர் CVPA சார்பாக கலந்து மணமக்களை வாழ்த்தினார்கள்.



நமது சங்கத்தின் வடசென்னை உறுப்பினர் திரு ஸ்ரீதர் அவர்களின் மகள் செல்வி கீர்த்தனா அவர்களின் மஞ்சள் நீராட்டு விழாவிற்கு சங்கத்தின் வட சென்னை துணைத் தலைவர் திரு. அ. கௌஸ் பாஷா, இணைச்செயலாளர் திரு.பிரபாகரன், கொடுங்கையூர் பகுதி செயலாளர் திரு. டோனி மற்றும் உறுப்பினர்கள் திரு. மோகன் ராவ், திரு. கோபி, திரு. ரவிசங்கர் மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டு வாழ்த்திய தருணம்.

ஆதம்பாக்கத்தை சேர்ந்த நமது சங்க உறுப்பினர் திரு. ஸ்ரீதர் அவர்களின் ஸ்ரீதர் ஸ்டுடியோவின் 25 ஆவது வெள்ளி விழாவை வெகு சிறப்பாக கொண்டாடினார். நமது சங்கத்தின் சார்பாக தலைவர் செல். செல்வம் செயலாளர், DM.பிரேம்குமார், பிஆர்ஓ ரவிக்குமார், துணைத் தலைவர் ஜெயக்குமார், முன்னாள் பிஆர்ஓ புருஷோத்தமன், முன்னாள் பகுதி செயலாளர் திலீப் ஆகியோர் நேரில் கலந்து கொண்டு வாழ்த்தினார்கள்.





நமது சங்க உறுப்பினர் கே.பி ரஞ்சன் -ஆர்.புனிதா இவர்களின் மகன் ஆர். சீனிவாசன்- சிவசங்கரியின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் நமது சங்கம் சார்பாக சங்க நிர்வாகிகள் மற்றும் பகுதி செயலாளர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.



நமது சங்கத்தின் மந்தவெளி பகுதி செயலாளர் டி. முரளி அவர்களின் மகன் சோழனின் முதலாவது பிறந்தநாள் விழாவை வெகு சிறப்பாக கொண்டாடினார்கள் இந்த நிகழ்ச்சியில் நமது சங்கம் சார்பாக சங்க நிர்வாகிகளும் பகுதி செயலாளர்களும் கலந்து கொண்டு குழந்தையை வாழ்த்தினார்கள்




முன்னாள் நுங்கம்பாக்கம் பகுதி செயலாளர் ரஜினி பத்மநாபனின் மகள் பவித்ரா அவர்களின் தலைமையில் சென்ற மகளிர் ஹாக்கி அணி, போட்டியில் கலந்து கொண்டு முதலமைச்சரின் கோப்பையை வென்று நான்காவது முறையாக முதலிடத்தை தக்க வைத்துக்கொண்டனர். நமது சங்கம் சார்பாக இந்த குழுவை வாழ்த்துகிறோம்.



எம்ஜிஆர் அறக்கட்டளை மற்றும் குட்சன் மீடியா இணைந்து, வெவ்வேறு துறையில் சிறந்த சேவை புரிந்தவர்களை தேர்ந்தெடுத்து ஒவ்வொரு வருடமும் அவர்களை பாராட்டி விருது வழங்கி வருகிறது. அந்த வகையில் 2023 ஆம் ஆண்டில், புகைப்பட துறையில் சிறந்த சேவை புரிந்தமைக்காக, நமது சங்க உறுப்பினர் எஸ்.கலியபெருமாள் அவர்களுக்கு கலைச்சுடர் ஒளி விருது வழங்கி கௌரவித்துள்ளது. எஸ். கலியபெருமாள் அவர்களுக்கு இந்த விருதை திரைப்பட **நடிகர் லொள்ளு சபா மனோகர்** அவர்கள் வழங்கினார். படத்தில் நிறுவனத் தலைவர் பூவை தமிழன் மற்றும் இயக்குனர் விஜெய் தமிழன் ஆகியோர் உள்ளனர்.

# முன்னேறும் புகைப்படக்கலைத் தொழில்நுட்பம். தொழில் போட்டியால் சரியும் வியாபாரம்!

கொரோனா கால முடிவிற்குப் பிறகு திருமண விழாக்கள் நடைபெறும் இடங்கள் யாவும் முன்பு இருந்ததை காட்டிலும் கலர்ஃபுல்லாக கோலாகலமாக அற்புதமான அலங்காரங்களுடன் காட்சியளிக்கின்றன. இன்றைய மணமக்கள் திருமண மண்டபத்தின் தோற்றத்தில் தொடங்கி எல்லா ஏற்பாடுகளையும் அவரவர் பட்ஜெட்டு களுக்கு ஏற்ப ஏற்பாடு செய்து கொள்கின்றனர். தங்கள் திருமணம் சமூக ஊடங்களில் டிரெண்டாகவும், ஏராளமான லைக்குகளை அள்ளிக் குவிக்கவும், புதுப்புது கான்சப்டை உருவாக்குகின்றனர். இன்றைய மணமக்கள் போட்டோகிராபி வீடியோகிராபிகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றனர். நல்ல ஒத்துழைப்பும் தருகின்றனர். திருமண நாளில் ஒவ்வொரு முக்கியமான தருணங்களையும் நினைவுகளையும் உயர்தர தொழில்நுட்பத்தில் வடிவமைத்துக் கொள்ள விரும்புகின்றனர். புகைப்படத்துறையின் ஒவ்வொரு வளர்ச்சி யையும் இன்றைய மணமக்கள் உன்னிப்பாக கவனித்து வருகின்றனர். இதனால் திருமண தேதி உறுதி செய்த உடனே இன்ஸ்டா மற்றும் பேஸ்புக்கில் தலைசிறந்த ஒரு புகைப்படக் கலைஞனை தேடத் தொடங்கி விடுகின்றனர். பலத்த கொட்டேஷன் போட்டிகளுக்கிடையே ஒரு புகைப்படக் கலைஞனை தேர்வு செய்கின்றனர். அவரிடம் ரீல்ஸ், டீசர், ட்ரெய்லர், மாண்டேஜ், கேண்டிட் ஒரு பெரிய லிஸ்ட்டை கொடுத்து அசத்துகின்றனர்.

கொரோனா காலத்திற்குப் பிறகு ஒளிப்படத் துறையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது. ஸ்மார்ட் போன்கள் மக்கள் கையில் சேர்ந்த பிறகு ஒளிப்படக் கலைஞர்களுக்கு இணையாக புகைப்படங்கள் எடுக்கும் அளவிற்கு ஆர்வம் ஏற்பட்டு வருகிறது. புதுப்புது கருவிகள் நாள்தோறும் அறிமுகமாகி வருகிறது. தேர்ட் பார்ட்டி என சொல்லப்படும் அக்சஸசரீஸ் புகைப்பட கலையை மேலும் மேம்படுத்துகிறது. இதனால் உலகெங்கிலும் ஒளிப்பட கலைஞர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதை நம்மால் ஆங்காங்கே காண முடிகிறது.

இந்திய திருமணங்கள் சார்ந்த தொழில்கள் பல ஆயிரம் கோடி மதிப்புடையதாக உள்ளது. 2022 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட ஆய்வின் ஒரு புள்ளி விவர கணக்கின்படி இந்திய திருமண தொழில்களின் மதிப்பு என்பது 03.75 லட்சம் கோடியாக உள்ளது. ஆனாலும், திருமணங்கள் சார்ந்து செய்யப்படும் பல தொழில்கள் இன்னும் முறைப்படுத்தாமல் முறைசாரா தொழிலாகவே உள்ளன. தொழில் போட்டி என்பது இங்கே தவிர்க்க முடியாத ஒன்றாக இருந்து வருகிறது. இங்கே உள்ள பல தொழில்கள் பணம் வாங்கும் விஷயத்தில் ஒரே சீரான முறையை பின்பற்ற முடிவதில்லை. விலையில் ஏற்ற இறக்கம் இருந்து கொண்டே உள்ளது. கடந்த காலங்களில் திருமணம் சார்ந்த தொழில்துறையில் புகைப்படம் எடுப்பதற்கான செலவு மிகப்பெரிய அளவில் அதிகரிப்பை கண்டு வருகிறது. திருமணம் சார்ந்து செய்யப்படும் தொழில்களில் வாடிக்கையாளர்கள் கேட்டரிங் சர்வீஸ் 30%, டெக்கரேஷனுக்கு 14% ,பரிசு பொருட்களுக்கு 19%, நிகழ்ச்சி திட்டமிடங்களுக்கு 12% , தளவாடங்களுக்கு 9%, தேனிலவுக்கு 8% , புகைப்படங்கள் எடுக்க 3%, அழைப்பிதழ் 3% செலவு செய்வதாக ஒரு ஆய்வறிக்கை கூறுகிறது.

**CVPA NEWS** (Tamil & English ) Monthly Newspaper,
**RNI No. TNBIL / 2005 / 15261 (R.Dis no.1834/04)**

Published by **B.SRIDAR,** on behalf of
**Chennai Video & Photographers' Association,**
at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 2860 7821
Email : cvpanews2005@gmail.com, Website : www.cvpa.in
Printed by **M.NAVANEETHAN,** at **Nava Jothi Achagam,**
No.8. Muktharunnissa Begum St, Ellis road, Chennai-2.
Editor : **B.SRIDAR,** Mobile: 8015170351

**If undelivered please return to**
**Chennai Video & Photographers' Association,**
**at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 28607821**

Postal Registration no TN/ARD/11/2021-2023 WPP License No: TN/PMG/CCR/WPP 557/2021-2023
Posted at Egmore RMS/I (Partika Channel) Posted on 14.03.2023

**To**